# ‘என் எதிரிக்கு எதிரி எனக்கு

▲ சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பன் மகள் என்ற காரணத்தால் பிரபா முத்துலட்சுமிற்கு பொறியியல் கல்வி கற்க வாய்ப்புத் தராமல் அலைக்கழிப்பது அநீதியானது. வீரப்பன் மீது ஜாதிச் சாயம் பூசி அவருக்காகப் பரிந்து பேசிய பா.ம.க.வும், இந்த விஷயத்தில் கை கழுவி விட்டிருப்பது சுயநலமானது. வீரப்பன் மகளின் படிப்பிற்காக முயற்சிகள் எடுக்கிற திராவிட மணி பாராட்டுக்குரியவர்.

த. சத்தியநாராயணன், அயன்புரம்.

▲ அரசிற்கு பகையாளியாக வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி இருக்கலாம். ஆனால் அவரது மகள் பிரபா முத்துலட்சுமி என்ன பாவம்செய்தார்?பா.ம.க.விற்கு தி.மு.க.விடம்‘எம்.பி.சீட்’வாங்கவே நேரம் போதவில்லை. வீரப்பனைப் பற்றி தங்கள் டி.வி.யில் தொடர் ஒளிபரப்பி ‘கல்லா’ கட்டிய அக்கட்சி, வீரப்பனின் மகளின் படிப்பு பற்றிக் கண்டுகொள்ளாதது மகா கேவலம் என்றால் அது மிகையல்ல.

எஸ். மந்திரமூர்த்தி, புதுச்சத்திரம்.




▲ வீரப்பன் உயிரோடிருந்த வரை,அவருடைய தயவை நாடி மறைமுக ஆதரவளித்த அரசியல் கட்சிகள், அவர் இல்லாத நிலையில் மனைவியையும், மகளையும் பரிதவிக்கவிட்டு, பாராமுகமாயிருப்பது நன்றி கெட்ட செயல். வீரப்பன் சந்தனமரக் கடத்தல் மன்னனாக இருந்தாலும், ஒரு தமிழ்ப் போராளி என்பதற்காகவாவது அவரது குடும்பத்திற்கு அவர்கள் உதவ வேண்டும்.

மு. கமால் பாட்சா, உறையூர்.

▲ தண்டவாளம் தகர்க்கப்பட்டும்கூட இரண்டு துரித ரயில்கள் விபத்துக்குள்ளாகாமல் தப்பித்துக் கொண்டதற்கு ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, டிரைவர் ஆகியோரின் விழிப்புணர்வுதான் காரணம். ஆனால் நாசவேலையில் ஈடுபட்ட சதிகாரர்களுக்கு உடனே சாவுமணி அடிக்காவிட்டால், பின்னர் விழுப்புரம், எழும்பூர் என்று கை வைக்கப் பார்ப்பார்கள். ராஜபக்ஸே மீதுள்ள கோபத்தை இலங்கையில் காண்பிக்க வேண்டியதுதானே?

லெமூரியன், திருவண்ணாமலை.

▲ மர்மங்களை அவிழ்க்கக் கூடியது இந்திரா சௌந்தர்ராஜனின் பேனா முனை. அத்தகைய பேனா முனை, இன்று தமிழின் சிறப்புகளை, அதன் கவிதைகளிலுள்ள கருத்துச் செறிவுகளை தம் இயல்பான நடையில் சொல்லியுள்ளது அவர் எழுத்தாற்றலுக்கும், புலமைக்கும் சான்று.

ராகம், கோயம்புத்தூர்.

▲ ‘வைரச் சுரங்கம்’ என்ற தலைப்பிலான தலையங்கம் நினைவில் நின்றது. எடுத்துக் கொண்ட பாடத்தில் திறமை காட்டுவதும், ஏற்றுக் கொண்ட பதவிக்குப் பெருமை சேர்ப்பதும்தான் முயற்சியின் திருவினையாக இருக்க முடியும். எந்த ஒரு நிலையிலும் ஆய்ந்து உயர்வுள்ளத்தோடு தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் எவர் ஒருவருக்குமே வானமும்கூட தொட்டுவிடும் தூரம்தான்.

கா. இர.குப்புதாஸ், செஞ்சி.

▲ ‘வர இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வோடு தே.மு.தி.க. கைகோர்க்கக்கூடும்’ என்ற செய்தி கசியத் துவங்கியதிலிருந்தே, அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் சற்று கதிகலங்கிப் போயிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில், ‘அ.தி.மு.க. அணியில் விஜயகாந்த்? -ம.தி.மு.க., பா.ம.க. ஆப்ஷன் என்ன?’ என்ற உங்களின் அரசியல் கட்டுரை, எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல் களத்தினை முன் கூட்டியே கணித்து, சம்பந்தப்பட்டவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்க வைத்துவிட்டது.

இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

▲ 2011 சட்டமன்றத் தேர்தல், அ.தி.மு.க.வுக்கும், தே.மு.தி.க.விற்கும் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற ஒரு தேர்தல். இதில் தேற வேண்டுமெனில் அ.தி.மு.க.வும், தே.மு.தி.க.வும் ஒன்றை தானம் செய்ய வேண்டும். அது தே.மு.தி.க. முதல்வர் பதவியையும், அ.தி.மு.க. அதிக இடங்களையும் விட்டு கொடுக்க வேண்டும் என்பதுதான்.

வி.ஆர். ஆனந்த், சென்னை.

▲ அ.தி.மு.க. அணியில் தே.மு.தி.க. என்பது இன்றைக்கு பெரும்பாலானோரின் கணிப்பாக உள்ளது. ஆனால் ஜெயலலிதா மற்றும் விஜயகாந்த் ஆகியோரின் குணாதிசயங்கள் சற்றேறக்குறைய ஒன்றுதான். ‘என் எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன்’ என்ற அடிப்படையில் மட்டும் உருவாகும் கூட்டணி, வெற்றி பெறுமா என்பதே கேள்வி.